தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற, நிதி தர மறுக்கின்ற, மும்மொழி திட்டத்தை திணிக்கின்ற, நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க திட்டமிடுகின்ற ஒன்றிய அரசிற்கு எதிராக தூத்துக்குடி தெற்கு மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி புதுக்கோட்டையில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், திராவிட இயக்க சிந்தனையாளர் சூர்யா சேவியர், கழக இளம் பேச்சாளர் கோ.சண்முகநாராயணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பை.மூ.ராமஜெயம், எம்.சி.சண்முகையா, எஸ்.ஆர்.எஸ் உமரிசங்கர், புதூர் சுப்பிரமணியன், சு.சரவணக்குமார், ஜெயக்கொடி, செங்குழி ரமேஷ், பாலசுந்தரம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டம் - பாளையங்கோட்டையில்

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்! 466 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்! செ.ராபர்ட் புரூஸ் எம்.பி. - மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. முன்னிலை!

நெல்லை.மார்ச்.25- நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாமில் சட்டப்பேரவை மு.அப்பாவு பங்கேற்று 466 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல் வஹாப் எம். எல்.ஏ. மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்றுத் துறையினரால் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.நெல்லை மாவட்டத்தில் கடந்த மே 2021 முதல் 3 கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் டாடா சோலார் பவர் நிறுவனத்திற்கென பிரத்தியேகமான வேலை வாய்ப்பு முகாம் உள்பட 9 மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகங்கள் நடத்தப்பட்டுள்ளது. இம் முகாம்களில் இதுவரை 945 வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு 6316 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்ட நிர்வாகம்,மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து இன்று நடத்திய 10 வது வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலை வாய்ப்பு நாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இன்று நடைபெறும் வேலைவாய்ப்பு முகாமில் 116 வேலை அளக்கும் நிறுவனங்கள் பல்வேறு பிரிவுகளில் வேலை நாடுநர்களை தேர்வு செய்ய இம் முகாமிற்கு வருகை புரிந்துள்ளனர். நடைபெற்ற முகாமில் 466 நபர்கள் பணி நியமன ஆணைகள் பெற்றுள்ளனர்.

மு தலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு ஏழை,எளிய,மக்களின் குழந்தைகள் பட்டப் படிப்பு படிப்பதை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம்,தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 ம் வழங்கப்பட்டு வருவதோடு, என்ன படிப்பு படிக்கலாம் என்பதை விட என்ன படித்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று மேல் நிலை இரண்டாம் ஆண்டு படித்து முடித்தவுடன் நான் திட்டத்தின் மூலம் மாணவர் களுக்கு கற்றுத் தரப்படுகிறது.

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 17 லட்சம் குறு,சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்கப் பட்டுள்ளது.32 தொழிற் பூங்காக்கள்,28 தொழிற் பேட்டைகள் தொடங்கப் பட்டுள்ளது. தொழில் வளத்தை பெருக்குவதன் மூலம் அதிக அளவிலான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுவதால் தமிழ் நாட்டில் என்ன படித்தாலும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை யை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள் ளது.

மேலும் அரசு பணிக்கு செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு பயிலும் மாணவர்களுக்கு பிரத்தியேகமாக மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் சிறப்பு பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டு, பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான மாதிரி தேர்வு நடத்தி கட்டணம் இல்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த 3 ஆண்டு களில் 243 மாணவர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு போட்டி தேர்வுகளில் வெற்றி பெற்று பல்வேறு அரசு துறைகளில் பணியாளராக பணிபுரிந்து வருகிறார்கள்.ஒவ்வொரு மாணவர்களும் தங்களது கல்வி கனவை நிறைவேற்றும் வகையில் கல்வி அறிவும்,அதற்குத் தேவையான வேலை வாய்ப்பினையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியாளர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த்,மண்டல இணை இயக்குநர் வேலை வாய்ப்பு (பொறுப்பு) சண்முகசுந்தர்,கல்லூரி செயலர் ஜெயச்சந்திரன் கல்லூரி துணை முதல்வர் பர்னபாஸ் ஜேக்கப்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி,ராஜன் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள்,வேலை நாடுநர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஏப்ரல் 4 அன்று - இராமநாதபுரம் திருஉத்திரகோசமங்கை

மங்களநாத சாமி திருக்கோயில் குடமுழுக்கு! உள்ளூர் விடுமுறை அறிவித்திடுவீர்!

சட்டப்பேரவையில் - காதர்பாட்சா முத்துராமலிங்கம் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 25 - "ஏப்ரல் 4 அன்று நடைபெறும் இராமநாதபுரம் - திருஉத்திர கோசமங்கை - மங்களநாத சாமி திருக்கோயில் குட முழுக்கிற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்திட வேண்டும் என சட்டப்பேரவையில் கழக சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு-

காதர்பாட்சா முத்துராமலிங்கம்: இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருஉத்திரகோசமங்கை மங்களநாதசுவாமி திருக்கோயில் என்ற சிவத்தலம் நவக்கிரகங்களே இல்லாத சிவத்தலம் என்று பக்தர்களால் போற்றப்படுகிறது. அந்த சிவத்தலத்தில், இலங்கை மன்னன் இராவணனுக்கும், மண்டோதரிக்கும் திருமணம் நடந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. சேது மன்னர்களின் பராமரிப்பில், இராமநாதபுரம் சமஸ்தானத்தின்கீழ் இருந்த அத்திருக்கோயிலுக்கு, நம்முடைய கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடன், அமைச்சர் அவர்கள், ரூபாய் 2 கோடி என்று மதிப்பீடு செய்து, குடமுழுக்கு நடத்துவதற்காக முதல் நிதியை வழங்கினார்கள். தனியார் பங்களிப்புடன் மிகப் பிரம்மாண்டமான இராஜகோபுர வளாகங்கள் மற்றும் கிழவன் சேதுபதி மன்னன் விட்டுச்சென்ற அர்த்த மண்டபம் போன்றவற்றை பராமரித்துக் கொண்டு வருகிறார்கள். வரவிருக்கின்ற ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி அங்கு குடமுழுக்கு விழா நடைபெறவிருக்கிறது. அத்திருக்கோயிலுக்கு, குறிப்பாக கொங்கு மண்டலத்திலிருந்து கோயம்புத்தூர், கரூர், ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து அதிகமான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

அந்தக் குடமுழுக்கு விழாவிற்கு ஏறத்தாழ 5 இலட்சம் பக்தர்கள் இராமநாதபுரத்தில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய கழக அரசின் சார்பில் உள்ளூர் விடுமுறை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் குடமுழுக்கு பணிக்காக முதல் நிதி வழங்கினார்கள்.

அத்திருக்கோயில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் வருவதால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கண்காணிப்பில் அந்தக் குடமுழுக்கு விழாவை நடத்த வேண்டும் .

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இராமநாதபுரம் சமஸ்தானத்தின்கீழ் இருந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருஉத்தரகோசமங்கை திருக்கோயில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அரசினுடைய நிதியாக 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த மாதம் 4ஆம் தேதி வெகுசிறப்பாக குடமுழுக்கு நடைபெறவிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கைகள் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் விரும்பியவாறு, அவர் மகிழ்ச்சியுறுகிற வகையில், இந்த ஆட்சி நிச்சயமாக குடமுழுக்கு விழாவை நடத்தும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மண்டலம் பேட்டை 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஷேக் மன்சூர் ஏற்பாட்டில் ரமலான் பெருநாளை முன்னிட்டு 500 ஏழைகளுக்கு பித்ரா அரிசி, மளிகை பொருட்கள் ஆகியவற்றை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மேயர் ராமகிருஷ்ணன், பகுதி துணைச் செயலாளர் சுபுஹானி, வட்டச் செயலாளர் ஆறுமுகம், வேல்முருகன், மாமன்ற உறுப்பினர் மாரியப்பன், பிரேம் நசீர், அலி, ரபீக், டெல்லி சம்சுதீன், முத்து வேலாயுதம், காக்கா முருகன், லாலாகுமார், சிந்துபாய், நைனா முகமது, ரபீக், ரகுமான், பக்ருதீன், இர்பான், தௌபீக், பேட்டை அப்துல், ரசூல் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூரில் தேனி தெற்கு மாவட்ட திமுக சார்பில் புனித ரமலானை முன்னிட்டு 21 வது நாள் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம் ஏற்பாட்டில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். சின்னமனூர் கருங்கட்டான்குளம் முஸ்லீம் ஜமாஅத் முத்தவல்லி ஹாஜி முகமது திவான் மைதீன் மற்றும் சின்னமனூர் நகர்மன்றத் தலைவர் அய்யம்மாள் ராமு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார் வரவேற்றார். நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் மனோகரன், மாவட்ட துணைச் செயலாளர் செந்தில் மற்றும் 24வது வார்டு உறுப்பினர் அமினுதீன் மற்றும் இஸ்லாமிய சமுதாய பெருமக்கள் மற்றும் திமுகவினர் பலரும் திரளாக கலந்து கொண்டனர்.

மரு.ராணிஸ்ரீகுமார் எம்.பி. - ஈ.ராஜா எம்.எல்.ஏ. - சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ. - வே.ஜெயபாலன் முன்னிலை!

தென்காசி மாவட்டத்தில் ரூ.8.05 கோடியில் பணிகள் அடிக்கல் நாட்டுதல் - துவக்க விழா!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

தென்காசி.மார்ச்.25. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சித்துறை சார்பில் தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம் குருக்கள்பட்டி ஊராட்சி யில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் உட்பட 3 புதிய திட்டபணிகள் ரூபாய் 752.49 லட்சம் மதிப்பில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஊர்மேலழகியான் ஊராட்சி அங்கன்வாடி மையக் கட்டிடம் உள்பட பல்வேறு துறைகள் மூலம் 3 முடிவுற்ற பணிகள் ரூபாய் 52.55 லட்சம் மதிப்பில் துவக்க விழா நிகழ்வு ஆக மொத்தம் ரூபாய் 8.05 கோடி மதிப்பிலான பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் துவக்க விழா நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்)சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்) தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது,

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் தென்காசி மாவட்ட மக்கள் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குருக்கள்பட்டி ஊராட்சியில் குருக்கள்பட்டியில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் 100 வீடுகள் கொண்ட(10 ஏக்கர் இடத்தில்) பெரியார் நினைவு சமத்துவபுரமும்,குவளைக்கண்ணி கிராமத்தில் தாட்கோ மூலம் ரூ.1.27கோடி மதிப்பீட்டில் கிராம அறிவுசார் மையமும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவு திட்டம் தான் பெரியார் நினைவு சமத்துவபுரம் ஆகும்.எல்லோரும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் வாழ வேண்டும் என்பதற்காக பெரியார் சமத்துவபுரத்தை கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள்.நம் முதல்வர் அவர்கள் அதனை பின்பற்றி பெரியார் நினைவு சமத்துவபுரம் இல்லாத இடங்களுக்கு சமத்துவபுரம் அமைக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள்.அறிவுசார் மையங்கள் கட்டப்பட்டு வருகிறது.

விவசாயிகள் வளர வேண்டும் பிள்ளைகள் படிக்க வேண்டும்.

மாணவ,மாணவிகள் கல்லூரியில் சென்று படிக்க மாதம் ரூபாய்1000, வழங்கி உற்சாகப்படுத்தி வருகிறார்கள். குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம். நாம் நம் வீட்டில் செய்ய வேண்டியதை எல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் நம் குடும்பத்தில் ஒருவராக இருந்து இதனை எல்லாம் செய்து வருகிறார்.

பெண்கள் முன்னேற வேண்டும், சம்பாதிக்க வேண்டும்,யாரையும் எதிர்பார்க்கக் கூடாது.என்ற நோக்கத்துடன் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

திராவிட மாடல் அரசின் திட்டங்கள் எல்லாருக்கும்,எல்லாம் இதுதான் திராவிட மாடல் ஆட்சி. இந்த திராவிட மாடல் ஆட்சி நீடித்திருக்க நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச் செல்வி,மேலநீலிதநல்லூர் ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை ராமச்சந்திரன், பால்ராஜ், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் பொன் முத்தையா பாண்டியன், லாலா சக்கரபாண்டியன், சங்கரன்கோவில் நகர் மன்ற தலைவர் உமாமகேஸ்வரி குருக்கள்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மகேஷ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், மாவட்ட பொருளாளர் இல.சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், நகர செயலாளர் மு.பிரகாஷ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் முகேஷ், முத்துப்பாண்டி, பசுபதி பாண்டியன், துணை அமைப்பாளர்கள் சரவணன், முத்துப்பாண்டியன், மகாராஜன், முருகன், கணேசன், தனசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர் சின்னக்குருசாமி, மாவட்ட பிரதிநிதிகள் செந்தூர்பாண்டியன் சண்முகப்பாண்டியன், தங்கதுரை மாவட்ட ஆதி திராவிட நலக்குழு தலைவர் ராஜ் என்ற கருப்பசாமி, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மரியலூயிஸ் பாண்டியன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி காசிப் பாண்டியன், முருகன்

ஒன்றிய அணி நிர்வாகிகள் சுபாஷ் சந்திரபோஸ்,கார்த்திக், மனோஜ்குமார், ராஜதுரை, குட்டிராஜ் நளினி, முத்துப்பாண்டியன், பாலசுப்பிரமணியன், மதிமுக மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், மதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் மாரிமுத்து மற்றும் பழனிவேல் முருகன், பிரதீப்குமார், கோட்டைபாண்டி, பொன்னு பாண்டியன், ராமர்பாண்டியன் ,தாமஸ், சண்முகராஜ், கிளைக் கழகச் செயலாளர்கள் சுகுமாரன், செந்தில்குமார், நாகராஜன், கருப்பசாமி,மரியசுந்தர்ராஜ், வெள்ளகுட்டி ,வரதராஜன், தமிழ்ச்செல்வன், ராஜேந்திரன், வெள்ளத்துரை, கருத்தப்பாண்டியன், பாபு அந்தோணி, ராஜ், பொன்ராஜ், நவமணி, ராஜ் திலீப்குமார், முத்தரசு, துரை கணேசன், பால்ராஜ், முத்துராமலிங்கம், மணி, வெள்ளத்துரை, குருக்கள்பட்டி கிளைக் கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், சண்முகையா, மகாராஜன், குருசாமி பால்பாண்டியன், ராமர்பாண்டியன், முத்துக்குட்டி,பூசை பாண்டியன், அண்ணாமலை, மதன்ராஜ் தமிழரசன், மனோஜ்குமார், பாரதி பெரியசாமி,மேலநீலிதநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வராஜ், கண்ணன் உள்பட அரசு அலுவலர்கள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள், திரளாக கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம். எல்.ஏ.அறிவுறுத்தலின்படி 38 வது வட்ட கழக உறுப்பினர் செல்வ பெருமாள் ஏற்பாட்டில் பாளை ஏ.ஆர்.லைன் புனித அன்னாள் ஆதரவற்றோர் இல்லத்தில் இரவு உணவு வழங்கும் நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று வழங்கினார்.நிகழ்வில் அலிஃப் மீரான்,இனியன்,வேங்கை வெங்கடேஷ்,ஸ்டார் முருகன், கதிரேசன்,எம்.எஸ்.ராஜ்,கேபிள் குமரேசன்,கிங் பாலா,ஷெட்டி,சிவா, மகாராஜன்,கிருஷ்ணகுமார்,அந்தோணி ராஜ்,வெங்கடேஷ்வரன்,வேல் ஆறுமுகம்,இசக்கி ஐயப்பன், சபரி வாசன்,முருகன்,குமார்,சாம்ராஜ், வேலாயுதம்,மகாராஜன்,சிவா, சுதாகர்,விக்ரம்,சங்கர்,வீரபாகு ஐயப்பன்,ஆனி ரேக்லண்ட்,சித்ரா பௌர்ணமி,சங்கர் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.